# மெட்ரோ ரயில், 'மொபைல் ஆப்' 50 ஆயிரம் பேர் பதிவிறக்கம்

**சென்னை, அக். 5–**

மெட்டோ ரயில், 'மொபைல் ஆப்' வசதியை, 50 ஆயிரம் பேர் பதிவிறக்கம் செய்து உள்ளனர்.

மெட்ரோ ரயில் நிர்வாகம், பயணியர் வசதிக்காக, 'சி.எம்.ஆர்.எல்., மொபைல் ஆப்' வசதி, அறிமுகம் செய்தது.

இந்த மொபைல் ஆப்பில், ரயில்களின் வருகை, புறப்பாடு, பயண கட்டண விபரம், மெட்ரோ ரயில் நிலைய விபரங்கள், அருகில் உள்ள நிலையங்களின் விபரம், நிலையங்களில் வாகன வசதி, ஓட்டல் வசதி, சுற்றுலா தலங்கள் உள்ளிட்டவை குறித்து தெரிந்து கொள்ளலாம்.

மேலும், அந்தந்த அலுவலகங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி, தொடர்பு எண்களுடன் இடம்பெற்றுள்ளன. இந்த ஆப்பில், மெட்ரோ ரயில் குறித்த குறை, நிறைகளையும் தெரிவிக்கலாம்.

இந்த மொபைல் ஆப் வசதியில், டிராவல் கார்டு ரீசார்ஜ் செய்யலாம். ஒரு டிராவல் கார்டில், 1,000 ரூபாய் வரை ரீசார்ஜ் செய்யலாம்.

ஒருவர், ஐந்து கார்டு வரை ஒரே நேரத்தில் ரீசார்ஜ் செய்யும் வசதி செய்யப்பட்டு உள்ளது.

இந்த மொபைல் ஆப்பை, இதுவரை, 50 ஆயிரம் பேர் பதிவிறக்கம் செய்துள்ளனர்.